C.S.I. TAMIL PARISH AL-AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா.

பொழிவு : 18

APRIL 2026

ஆகாரம் : 04



நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்

காணாதிருந்தும்

விசுவாசிக்கிறவர்கள்

பாக்கியவான்கள்

யோவான் 20:29

# UPCOMING EVENTS

**All Sun**
Apr '26

5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Sunday

**18**
Apr '26

7:30 pm
**18 TH CHURCH DAY**
**HOLY COMMUNION SERVICE**
Church Members Home
Tuesday

**17**
Apr '26

7:30pm - 09:30pm
**WOMENS FELLOWSHIP SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain
Saturday

**All Wed**
Apr '26

7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain
Wednesday

**04**
Apr '26

10:30am
**FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain
Saturday

**25**
Apr '26

7:30pm - 09:30pm
**EVENING CHURCH SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

**25**
Apr '26

9:30 pm
**BIBLE QUIZ**
**ECCLESIASTES, SONG OF SONGS & ISAIAH 1-20**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

**30**
Apr '26

11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain
Tuesday

**All Sat**
Apr '26

6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday




**அன்பிற்கினியவர்களே, உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:25) என்ற இயேசு கிறிஸ்து நம்முடன் இருக்கிறார். நமக்காகப் பாடுகளை ஏற்ற அவர், சிலுவையில் மரித்தார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார், அவர் வெற்றி வேந்தர் ஆவார்.**

## உயிர்த்தெழுதல்:

ஃபிளாவியஸ் ஜோசிபஸ் என்பவர் (37–100) முதல் நூற்றாண்டில் வாழ்ந்த மிக முக்கியமான யூத வரலாற்று ஆசிரியர் மற்றும் அறிஞர் ஆவார். இவர் யூதர்களின் பழங்கால நிகழ்வுகள் **(ANTIQUITIES OF JEWISH)** மற்றும் யூதப் போர் **(THE JEWISH WAR)** ஆகிய நூல்களை எழுதினவர். இரத்தசாட்சியான ஜஸ்டின் **(JUSTIN MARTYR -100-165)** இவர் தொடக்க கால கிறிஸ்தவ திருச்சபையின் மிக முக்கியமான மறைபொருள் அறிஞர் **(APOLOGIST),** தத்துவ ஞானி, மற்றும் இரத்த சாட்சியானவர் ஆவார். இவர் முதல் மற்றும் இரண்டாம் மன்னிப்பு **(FIRST AND SECOND APOLOGIES)** டிரைபோவுடன் உரையாடல் ஆகிய நூல்களை எழுதி உள்ளார். ரோமின் தலைவர் ருஸ்டிகஸ் இவரையும் இவருடன் இருந்தவர்களையும் நியாயம் விசாரித்து, இயேசு கிறிஸ்துவை இவர்கள் மறுதலிக்காமையால் மரண தண்டனை விதித்தார். அதன்படி இவர்கள் தலைகள் வெட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்கள்.

தெர்த்துல்லியன் (166–220) இவர் தத்துவஞானி இறையலாளர் ஆவார். இவரே **(TRINITY)** திரித்துவம் என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தியவர். மறைச்சாட்சியின் இரத்தம் திருச்சபையின் வித்து என்றவர். மேற்கண்ட மூன்று தொடக்க காலத் திருச்சபைத் தந்தையர்களும் மிகக் குறிப்பிட்டு ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது பாடு மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் ஆதாரத்துடன் தெரிவிக்கின்றனர்.

## விசுவாசம்:

ஆண்டவர் இயேசு மார்த்தாளிடம் கூறியது, நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவான் 11:40) என்பதே. நம் ஒவ்வொருவரிடமும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கேட்கின்ற கேள்வியும் இதுவே. மகனே, மகளே நீ என்னை விசுவாசிக்கிறாயா? என்பதே. அன்று ஆபிராம் கர்த்தரை விசுவாசித்தார், அதை அவர் அவருக்கு நீதியாக எண்ணினார் (ஆதியாகமம் 15:6). கர்த்தருடைய நிறைவான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தங்களாகப் பெற்றார் (ஆதியாகமம் 22:17,18). ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் எனப்பட்டார். ஆபிரகாம் பெற்ற விசுவாச வாழ்வின் நிறைவை எபிரேயர் 11:8–10 ஆகிய திருவார்த்தைகளில் படிக்கிறோம். கிறிஸ்தவரின் வாழ்வில் மிகத் தேவையான ஒன்று ஆண்டவர் இயேசுவில் வைக்கும் முழுமையான விசுவாசமே.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பான தமது வெளிப்பாட்டில, "இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவான் 20:29). எலிசபெத்து மரியாள் உரையாடலில், "விசுவாசித்தவளே பாக்கியவதி" என்றும், அதனால் கர்த்தரை மகிமைப்படுத்தலாம் என்பதனையும் லூக்கா 1:45,46–ல் தெரிந்து கொள்கிறோம்.

பிரியமானவன்களே,நமது விசுவாசம் உலகின் மீதா? அல்லது அகிலத்தையும் படைத்து,நம் பாவத்திற்காகப் பாடுகளே ஏற்று மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவின் மீதா? என்பதற்கான பதில் காண்போம். நமது விசுவாசம் ஆண்டவர் இயேசுவின் மீது முழுமையாக இருக்குமாயின் நிறைவைக் கண்டு கொள்வோம். நம் வாழ்வில் அனைத்து நலன்களையும் பெறுவோம். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரேயர் 11:1).

சிந்திப்போம், ஆண்டவர் இயேசுவைப் பற்றிக் கொண்டு விசுவாச வாழ்வு வாழ்வோம், ஆபிரகாமை ஆசீர்வதித்த கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# அர்ப்பணிப்புள்ளக் குடும்பம்

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

லக்சன் என்ற பத்து வயது சிறுவன் VBS–க்குச் சென்று ஆண்டவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டான். தன் தகப்பனும் இயேசுவே கடவுள் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு வேதாகமத்தை அவரது பிறந்த நாளுக்கு பரிசாக லக்சன் வழங்கினான். அவர் புத்தகப் பிரியர் என்பதால் விரைவாக திருமறையை படித்து முடித்தார், ஆனால் அவரில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. லக்சன் அவரது இரட்சிப்புக்காக ஜெபித்தான். இயேசப்பா தலையில் இருந்து இதயத்திற்கு இத்திரு வசனங்கள் இறங்கட்டும் என்று மீண்டும் மீண்டும் இந்த ஜெபத்தைச் செய்தான். அப்போது அங்கு வந்த ஊழியர் ஒருவர், என்ன இப்படி ஜெபிக்கிறாய் என்று லக்சனிடம் கேட்டார். படித்த திருமறை இதயத்திற்கு வந்து இயேசுவே கடவுள் என என் அப்பா ஏற்க வேண்டும் என்றான். ஊழியரும் அந்த ஜெபக்குறிப்பை வைத்து ஜெபித்து சென்றார். இந்நிகழ்வு நமக்குக் கற்றுத் தருகிற பாடம், திருமறையை அநேக முறை படிக்கின்றோம் திருமறை வழி நாம் நடக்கிறோமா என்பதே, சிந்தித்துப் பார்ப்போம்.

அப்படி வேதத்தை கடைப்பிடித்து தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் தான் பிரிஸ்கில்லா அவரது கணவர் ஆக்கில்லா இவர்களைப் பற்றி நாம் அப்போஸ்தலர் 18:1,2 ஆகிய வசனங்களில் படிக்கின்றோம். கிலவுதியுராயன் என்கிற ஆட்சியாளர் ரோமாபுரியை ஆண்ட காலத்தில் யூதர்களை நாட்டை விட்டு வெளியேற்றுகிறார். அப்படி வெளியேறி கொரிந்து பட்டணத்தில் குடி அமர்ந்தவர்களே பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் ஆவார்கள். இவர்கள் கூடாரத் தொழிலை செய்தவர்கள், கர்த்தருக்கென்று தங்கள் இல்லத்தை திறந்து கொடுத்தவர்கள். இந்த இல்லத்தில் சபைக் கூடுதல் நடைபெற்றுள்ளது. இவர்கள் பவுல் அடியார் அவர்களை ஏற்றுக் கொண்டு உபசரித்து அவருடன் இணைந்து திருப்பணியை செய்திருக்கின்றனர்.

அப்பல்லோ என்கிற ஊழியர் யோவான் ஸ்நானகன் கொடுத்த திருமுழுக்கை குறித்து உபதேசித்து வந்துள்ளார். அவரிடத்தில் கிறிஸ்துவைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவின் வழியான இரட்சிப்பைப் பற்றியும் பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும் தங்கள் இல்லத்தில் வைத்து, அப்பொல்லோவை உபசரித்து மிகத் தெளிவான உபதேசத்தை கொடுத்துள்ளனர்(அப்போஸ்தலர் 18:24–26).

இவர்களின் அர்ப்பணிப்புள்ள ஊழியத்தை பவுல் குறிப்பிட்டு கூறும் போது, பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லையும் ஊழியத்திற்கென்று தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் அவர்களை வாழ்த்துங்கள் என்று கூறுகிறார் (ரோமர் 16:3–5).

இவர்கள் குடும்பமாக அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்தவர்கள். பவுலின் ஊழியத்திற்கு உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்தவர்கள்.

அந்நிய தேசமான கொரிந்துப் பட்டணத்தில் குடும்பத்துடன் ஆண்டவர் இயேசுவே கடவுள் என்று நிறைவாக வாழ்ந்தவர்கள்.

தங்கள் இல்லத்தை திறந்து கொடுத்து,சபைக் கூடுதலை சிறப்பாக நடத்தினவர்கள். தாங்கள் செய்த கூடாரத் தொழிலின் வழியாக கிடைத்த வருவாயை அர்ப்பணிப்புடன் ஊழியத்திற்கெனப் பயன்படுத்தினவர்கள்.

பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா குடும்பம் எடுத்துக்காட்டான குடும்பம். அது விசுவாசக் குடும்பம், அர்ப்பணிப்புள்ளக் குடும்பம் என்பதை தங்கள் வார்த்தையிலும் வாழ்க்கையிலும் வாழ்ந்து காண்பித்தக் குடும்பம் நாமும் நம்மை தூயத்திருமறை வழியே வாழ்ந்திட அர்ப்பணிப்போமா? ஆண்டவர் இயேசு கிறிஸ்துதாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா



*Mrs .P.Velanganni*

## மன்னா மார்ச்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. மார்ச் மாத மன்னவைக் குறித்த ஒரு பார்வை.பக்கம்-3, ஆயர் மடலில் உண்மையான உபவாசம் குறித்தும் அப்படி செய்யும் போது இறையாசியை பெறுவோம் என்றும், பக்கம் 4-ல் இயேசுவின் அன்பு அளவிட முடியாதது,அந்த மெய்யான அன்புடன் இவரிடத்தும் வாழ வேண்டும் என்றும், பக்கம்-5 செயலர் மடலில் முக்காலத்தும் நம்முடன் வாழ்ந்து வழிநடத்துகிறவர் நித்தியமானக் கர்த்தரே அவரைப் பற்றிக் கொண்டு வாழ்வோம் என்றும், பக்கம் 6,7-ல் இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்களின் மனந்திரும்புதலை புதுப்பித்துக் கொண்டவர்களாய், இந்த இரட்சண்யக் காலத்தில் தங்கள் வாழ்வை சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், பக்கம் 8-ல் நம்மை படைத்த கர்த்தரின் நோக்கத்தை அறிந்து, எஸ்தரைப் போல் கீழ்ப்படிதலான வாழ்வை வாழ வேண்டும் என்றும்,பக்கம் 9-ல், தினமும் நமது வாழ்வு சிறப்பாக இருந்திட வேதமும் ஜெபமும் காலைதோறும் தேவை என்றும்,பக்கம் 10-ல் திருமறையில் உள்ள பெண்கள் சிலர் வாழ்வின் மாதிரிகள் பற்றியும்,பக்கம் 11-ல் ரெபேக்காள் பக்கம் 12-ல் சாராள் ஆகியோரின் வாழ்வின் சில முன்மாதிரியான குறிப்புகள் பற்றியும், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கைவண்ணங்கள், யோபு நூலின் வினாக்களுக்கான விடைகள் எழுதியோர், தொடர்ந்து சிறுபிள்ளைகளுக்கான புதிர்கள், திருச்சபையின் சுற்றுலா புகைப்படங்கள் என அனைத்தும் சிறப்பானவையே. ARTICLE எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் தாமே சுக பெலன் ஜீவன் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக நன்றி செலுத்துவோம். கடந்த மாதம் நல்ல முறையில் விடுமுறை வேதாகமப் பள்ளி நடந்ததற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம் அதை நடத்திக் கொடுத்த அனைவருக்கும் திருச்சபையின் காரிய கமிட்டி சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நடைபெறவிருக்கும் திருச்சபையின் அண்டு விழாவிலும் பங்குபெற அன்புடன் அழைக்கிறோம் நன்றி

## காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" – யோவான் 20:29

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் நடந்த ஒரு முக்கியமான சம்பவம் தோமாவின் சந்தேகத்துடன் தொடங்குகிறது. மற்ற சீடர்கள் இயேசுவை உயிரோடு கண்டபோதும், தோமா அவர்களது சாட்சியை உடனே ஏற்கவில்லை. "அவருடைய கைகளில் ஆணியின் காயத்தை நான் காணாமல், என் விரலை அந்தக் காயங்களில் இடாமல், என் கையை அவருடைய பக்கத்தில் வைக்காமல் நான் விசுவாசிக்கேன்" என்று அவர் கூறினார். இந்தச் சந்தேக மனநிலை, பலருக்கும் இயல்பான மனித மனநிலையை பிரதிபலிக்கிறது. நாம் காண்பதற்கே நம்பிக்கை வைப்பது எளிது; ஆனால் காணாததை நம்புவது ஆழமான விசுவாசத்தைத் தேடுகிறது.

எட்டு நாட்கள் கழித்து, இயேசு மீண்டும் சீடர்களிடம் தோன்றினார். அப்போது தோமாவும் அவர்களுடன் இருந்தார். இயேசு நேராகத் தோமாவிடம் சென்று, "உன் விரலை இங்கே வைத்து என் கைகளைப் பார்; உன் கையை நீட்டி என் பக்கத்தில் வை; சந்தேகிக்காமல் விசுவாசி" என்றார். இந்த வார்த்தைகள் தோமாவின் உள்ளத்தைத் தொடந்தன. அவர் உடனே "என் ஆண்டவரும் என் தேவனும் நீரே" என்று அறிக்கை செய்தார். இதற்குப் பதிலாக இயேசு கூறியதுதான் இந்த வசனம்: "நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்; காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்."

இந்த வசனத்தில் உள்ள ஆழமான உண்மை, விசுவாசத்தின் இயல்பை நமக்குக் காட்டுகிறது. தோமாவின் விசுவாசம், அவர் கண்டதின் மீது அமைந்தது. ஆனால் இயேசு குறிப்பிடும் உயர்ந்த விசுவாசம், காணாதவற்றின் மீது நம்பிக்கை வைப்பது. இது வெளிப்படையான சாட்சிகளுக்குப் பிறகும், உள்ளார்ந்த நம்பிக்கையின் மூலம் உருவாகும் விசுவாசமாகும்.

இன்றைய காலத்திலும், நாம் பல விஷயங்களில் இதே நிலையை எதிர்கொள்கிறோம். அறிவியல், தொழில்நுட்பம், தரவுகள் போன்றவை நமக்கு ஆதாரங்களை அளிக்கின்றன. ஆனால் வாழ்க்கையின் முக்கியமான உண்மைகள்—அன்பு, நம்பிக்கை, நற்குணம், ஆன்மிகம்—இவை அனைத்தும் கண்களால் காண முடியாதவை. ஆனாலும் அவற்றின் விளைவுகளை நாம் அனுபவிக்கிறோம். அதுபோலவே, தேவனில் விசுவாசமும் கண்களுக்கு அப்பாற்பட்டது; ஆனால் இதயத்தில் உணரப்படுவது.

"காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்ற இயேசுவின் வார்த்தை, நம்மை ஒரு ஆழமான ஆன்மிக பயணத்திற்குக் கூட்டிச் செல்கிறது. இது கண்ணால் காண்பதைக் கடந்த, இதயத்தால் உணரும் விசுவாசத்தைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசம் நம்மை உறுதியாகவும், அமைதியாகவும், நம்பிக்கையுடனும் வாழச் செய்கிறது.

இந்த வசனம் நமக்கு ஒரு சவாலாகவும் இருக்கிறது. நாம் எதைக் கொண்டு நம்புகிறோம்? நம் விசுவாசம் வெளிப்படையான சான்றுகளின் மீது மட்டுமா அமைந்துள்ளது? அல்லது, நாம் காணாத போதிலும் நம்பத் தயாராக உள்ளோமா? உண்மையான விசுவாசம் என்பது, சோதனைகள், சந்தேகங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றின் நடுவிலும் நிலைத்திருக்கக்கூடியது.

மேலும், இந்த வசனம் ஒரு ஆசீர்வாத வாக்குறுதியும் ஆகும். "பாக்கியவான்கள்" என்று இயேசு கூறுகிறார். அதாவது, காணாமல் விசுவாசிக்கிறவர்கள் ஒரு சிறப்பான கிருபையைப் பெறுகிறார்கள். அவர்கள் தேவனுடன் ஒரு ஆழமான உறவை அனுபவிக்கிறார்கள். இந்த உறவு அவர்களுக்கு மன அமைதி, தைரியம், நம்பிக்கை ஆகியவற்றை வழங்குகிறது.

இன்றைய உலகில், பலரும் நிச்சயமற்ற சூழ்நிலைகளில் வாழ்கிறார்கள். எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கவலை, உடல்நலம், பொருளாதாரம், உறவுகள் போன்ற பல சவால்கள் நம்மைச் சுற்றி இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், காணாதிருந்தும் விசுவாசிப்பது எளிதல்ல. ஆனால் அதுவே நமக்கு தேவையான வலிமையை அளிக்கிறது. விசுவாசம் நம்மை முன்னேற்றும் சக்தியாக மாறுகிறது. தோமாவின் வாழ்க்கை நமக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அவர் ஆரம்பத்தில் சந்தேகித்தார், ஆனால் இறுதியில் ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்தினார். இதனால், நாம் சந்தேகப்படுவது தவறல்ல; ஆனால் அந்த சந்தேகத்தில் நிலைத்து நிற்காமல், உண்மையைத் தேடி விசுவாசத்திற்குள் நுழைவதே முக்கியம்.

இயேசுவின் வார்த்தைகள் இன்று நமக்குச் சொல்லுவது என்ன? "என்னை காணாதிருந்தாலும், என்னில் நம்பிக்கை வையுங்கள்." இந்த அழைப்பு, நம்மை ஒரு புதிய வாழ்க்கைக்கு அழைக்கிறது—அது விசுவாசத்தின் வாழ்க்கை. இந்த வாழ்க்கை, வெளிப்படையான ஆதாரங்களைத் தாண்டி, உள்ளார்ந்த நம்பிக்கையில் நிலைத்திருக்கிறது.

முடிவாக, "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்ற இந்த வசனம், நம்மை நம் விசுவாசத்தைப் பரிசோதிக்கவும், அதை வளர்த்துக்கொள்ளவும் அழைக்கிறது. நாம் காண்பதிலேயே நம்பிக்கை வைக்காமல், காணாதவற்றிலும் நம்பிக்கை வைத்து வாழும்போது, நாம் உண்மையான ஆசீர்வாதத்தை அனுபவிக்க முடியும். அந்த ஆசீர்வாதம், தேவனுடன் உள்ள நெருக்கமான உறவாகும். ஆகையால், நாம் எல்லோரும் இந்த வார்த்தையை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவோம். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்களாக இருந்து, தேவனுடைய பாக்கியத்தை அனுபவிப்போம்.

**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

**திருச்சபைச் செயலர்**

# உங்களை என் கைகளிலிருந்து பறிப்பவன் யார்?

நீ தேவாலயத்தை இடித்துப் போடு
நான் மூன்றே நாட்களில் எழுப்புவேன்
உலகத்தையே கலைத்துப்போடு
ஏழே நாட்களில் கட்டியெழுப்புவேன்!
நீ திருடிச்செல், நான் ஏழுமடங்காய் மீட்டுத்தருவேன்
நீ கொன்றுபோடு, நான் நித்திய ஜீவனோடு உயிர்ப்பிப்பேன்
நீ அழித்துப்போடு, நான் அழியாமையால் அலங்கரிப்பேன்
நீ ஒளித்து வை, நான் பிரபலமாக்குவேன்
நீ சேற்றில் அமிழ்த்து, நான் தூக்கி சிங்காசனத்தில் வைப்பேன்
நீ ஆழத்துக்கு இழுத்துச் செல்,
நான் உயரத்தில் உலவ வைப்பேன்
நீ ஒரு வழியை மூடு, நான் ஏழு வழிகளைத் திறப்பேன்
நீ அவர்களை வனாந்திரத்துக்குள் இழுத்துச்சென்றால்
அந்த வனாந்திரத்தை வயல்வெளியாக்குவேன்
நீ அவாந்திரவெளிகளில் அலையவிட்டால்
அந்த இடத்தையே நான் விருந்து சாலையாக்குவேன்..
நீ அவர்களை புதருக்குள் சிக்க வைத்தாலும்
நான் அங்கு மேய்ப்பனாய் தேடி வருவேன்
நீ அவர்களை வியாதியில் வீழ்த்த நினைத்தாலும்
நான் அங்கு பரிகாரியாய் வந்து நிற்பேன்!
நீ அவர்களைப் பாவத்தில் கட்டிவைத்தாலும்
நான் இரட்சகராய் இறங்கி வருவேன்!
அவர்கள் உலந்த எலும்புகளாய்க் கிடந்தாலும்
உயிர்ப்பிக்கும் காற்றாய் வந்து வீசுவேன்
மரணமே அவர்களை விழுங்கினாலும்
அவர்கள் கல்லறைகளை திறக்க
தோளில் சிலுவை சுமந்து கொல்கதாவுக்கு ஏறுவேன்!
அவர்கள் கொலைக்கே நியமிக்கப்பட்டிருந்தாலும்
நான் அவர்களை கொள்ளைப்பொருளாய் அள்ளிச்செல்வேன்!
நீ பிடிக்க பார்வோனை அனுப்பினால்
நான் மீட்க மோசேயை அனுப்புவேன்!
நீ பயமுறுத்த கோலியாத்தை அனுப்பினால்
அவனை இகழ தாவீதை அனுப்புவேன்
நீ வஞ்சிக்க சர்ப்பத்தை அனுப்பினால்
அதன் தலை நசுக்க குமாரனை அனுப்புவேன்
நீ இடித்துப்போட்டால்
கட்டியெழுப்ப அப்போஸ்தலனை அனுப்புவேன்
நீ பொய்களை ஊதினால்
அம்பலப்படுத்த தீர்க்கதரிசியை அனுப்புவேன்
நீ ஆடுகளைத் திருடினால்
அவைகளை மீட்க மேய்ப்பனை அனுப்புவேன்
நீ அந்தகாரப்படுத்தினால்
நற்செய்தி ஒளியோடு சுவிசேஷகனை அனுப்புவேன்
நீ பிள்ளைகளை பேதைகளாக்கினால்
பேதைகளை ஞானிகளாக்க போதகனை அனுப்புவேன்
நானே தேவன், எனக்குச் சமானமில்லை.
இவர்கள் என் ஜனங்கள், என் மேய்ச்சலின் ஆடுகள்
என் குமாரனைத் தந்து நான் சம்பாதித்த பிள்ளைகள்
இவர்களை நான் எப்படி மறப்பேன்?
எப்படிக் கைவிடுவேன்?

Article by

**MR. HERCHIL HARISH**

Men's Fellowship



# ஈகை
## தேவ அன்பின் வழி

தேவன் தந்த வரங்கள் எல்லாம்
நம் கையில் மட்டும் தங்காது;
பகிர்ந்திடும் உள்ளம் உள்ளதென்றால்
பரலோகம் நம் மனதில் தோன்றாது?

“கொடுக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான்” என்றார்
கர்த்தர் அன்போடு;
அன்பால் செய்த ஒவ்வொரு ஈகையும்
அவரின் இதயத்தில் எழுதப்படும் நித்தியமாகவே;

ஐந்து அப்பமும் இரண்டு மீனும்
ஆயிரங்களை பசியாற்ற செய்தது;
சிறிய ஈகையும் பெரிய அதிசயம் ஆகும்.
நம்பிக்கையில் கொடுத்தால் அது பெருகும்.

வலது கை கொடுக்கும்போது
இடது கை அறியாதிருப்பதாக;
ஏழைகளில் தேவனைக் காணும் கண்
அன்பில் வளர்ந்த இதயம் தான்
ஈகை என்பது பொருள் அல்ல
இதயம் நிறைந்த அன்பின் மொழி.

### முன்னுரை:

ஈகை என்பது மனித வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகும். பிறருக்கு உதவுதல், துன்பத்தில் உள்ளவர்களை காப்பாற்றுதல், தேவையுள்ளவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தல் போன்ற செயல்கள் அனைத்தும் ஈகையின் வெளிப்பாடுகளாகும். பைப்பிளில் ஈகைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

### திருமறைக் கூற்று:

திருமறைக் கூறுவதாவது, நாம் பெற்ற எல்லா ஆசீர்வாதங்களும் தேவனிடம் இருந்து வந்தவை. ஆகையால் அந்த ஆசீர்வாதங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது நம் கடமையாகும். “கொடுக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான்” என்று திருமறைக் கூறுகிறது. இதன் மூலம் ஈகை செய்பவர்கள் தேவனின் அருளைப் பெறுவார்கள் என்பதை காட்டுகிறது. இயேசு கிறிஸ்து தமது வாழ்க்கையின் மூலம் ஈகையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினார். அவர் ஏழைகள், நோயாளிகள் மற்றும் துன்புறும் மக்களுக்கு உதவி செய்து, அன்பும் கருணையும் காட்டினார். “உன் அயலானை உன்னைப் போல நேசி” என்ற அவருடைய போதனை ஈகையின் அடிப்படை கருத்தாகும்.

சிலுவைத் தாங்கிய தியாகம்,
ஈகையில் மலரும் அன்பு;
இண்டும் ஒரே வெளிப்பாடு -
மனிதரில் தேவன் ஒளிவு.

ஈகை செய்வது வெளிப்படையாக இல்லாமல் மனதார செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. பிறர் பாராட்டுக்காக அல்லாமல், தேவனுக்காகவும் அன்புக்காகவும் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்பவர்களை தேவன் மறைவாக ஆசீர்வதிப்பார்.

### முடிவுரை:

ஈகை என்பது பொருள் கொடுப்பதைக் குறித்தல்ல, அது அன்பு, கருணை, பகிர்வு ஆகியவற்றின் வெளிப்பாடாகும். திருமறை கூறுவதுபோல நாம் அனைவரும் ஈகை மனப்பான்மையுடன் வாழ்ந்து, பிறருக்கு உதவி செய்ய வேண்டும். இதன் மூலம் மனித சமுகத்தில் அமைதி மற்றும் அன்பு வளர்ச்சி அடையும்.

Article by
**SIS. BLESSY JEBA**
Women's Fellowship

வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சில் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலேயே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி. பிரசங்கி 11:9.




பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். நம் தூயத் திருமறையில் எனக்கு பிடித்தப் பகுதி யோசேப்பின் வாழ்க்கை வரலாறு ஆகும்.நம் அனைவரும் அறிந்த யோசேப்பின் வாழ்க்கை வரலாற்றை திருப்பிப் பார்த்தால்,நம் ஆண்டவர் இயேசு உண்மையாகவே நீதியுள்ள கர்த்தர் என்றுத் தெளிவுறும்.

### யோசேப்பின் வாழ்க்கைத் தொடக்கம்:

யோசேப்பு என்ற எபிரேயப் பெயரின் பொருள் அவன் பெருகுவான். யாக்கோபின் 11வது மகனும் ராகேலுக்கு முதல் மகனுமான யோசேப்பு கனவுகளின் விளக்கத்தை வெளிப்படுத்துவதில் கர்த்தரின் ஞானம் பெற்றவர். தன் உடன் பிறந்த சகோதரர்கள் செய்யும் தவறுகளைத் தந்தையிடம் கூறி, சகோதரர்களின் கோபத்திற்கு உள்ளானவர். அவர் நேர்மையுள்ளவர், தவறுகளை சுட்டிக் காட்டுகிறவர். நாமும் அவரைப் போன்று நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும், அவர் தந்தை யாக்கோபும் யோசேப்பை அதிகமாக நேசித்தார்.

### சகோதரர்களின் கோபம்:

யோசேப்பு தான் கண்ட சொப்பனங்களில், பின் நாளில் வரப் போகிறதை தன் தகப்பனுக்கும், தாய்க்கும், சகோதரர்களுக்கும் அறிவித்தார். அதாவது சூரியனும் சந்திரனும் 11 நட்சத்திரங்களும் தன்னை வணங்கினது என்றார். இதைக் கேட்ட யோசேப்பின் தகப்பன் நானும் உன் தாயாரும், உன் சகோதரரும் தரை மட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமா என்று கடிந்து கொண்டார், அதை அவர் மனதிலும் வைத்துக்கொண்டார். அதனால் அவர் சகோதரர்கள் யோசேப்பின் மேல் கோபம் கொண்டனர்.

### வியாபாரிகளின் கையில் யோசேப்பு:

ஒரு முறை ஆடு மேய்க்க சென்ற சகோதரர்களை தன் தந்தை யாக்கோபின் அறிவுரைப்படி, அவர்களுக்கான உணவை எடுத்துக் கொண்டு யோசேப்பு தேடிச்சென்றார். அவர் வருவதைக் கண்ட சகோதரர்கள் அவரைக் கொலை செய்ய சதி செய்தனர். அப்பொழுது அவர் மீது கரிசனை கொண்ட சகோதரர் ரூபன் அவரைக் கொலை செய்யாமல் குழியில் போட்டு விடலாம் என ஆலோசனைக் கூறினார். அதன் பின்னர் மீதியானிய வியாபாரிகள் வருவதைக் கண்டு யூதா

தன் சகோதரர்களை நோக்கி, யோசேப்பை இவர்களிடத்தில் விற்று விடலாம் என ஆலோசனைக் கூறினார். அதன்படி, தன் சகோதரனை மீதியானிய வியாபாரிகளுக்கு 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள்.

### கர்த்தரின் உன்னதச் செயல்பாடு:

எகிப்திற்கு அடிமையாக கொண்டு செல்லப்பட்டு யோசேப்பு எகிப்தின் பார்வோனின் பிரதான அதிகாரியான போத்திபார் என்பவரிடத்தில் விற்கப்பட்டார். போத்திபார் யோசேப்போடே அவருடைய கர்த்தர் இருக்கிறார் என்றும்,அவர் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்க பண்ணுகிறார் என்றும் அவர் கண்டு தன் வீட்டுக்கும், தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைககாரணராக்கினார்.

### பாவத்தைத்தவிர்த்தார்:

அழகான ரூபமும் சௌந்தரியமும் கொண்ட யோசேப்பின் மேல் போத்திபாரின் மனைவி கண் போட்டு, அவனை தன்னோடு தவறாக இருக்கும்படி அழைத்தார். ஆனால் யோசேப்பு கர்த்தருக்கு பயந்ததினால் அதற்கு சம்மதிக்கவில்லை. ஒரு நாள் யோசேப்பின் ஆடையைப் பிடித்து போத்திபாரின் மனைவி இழுக்க, அந்த ஆடையை விட்டு வெளியே ஓடினார். பின்பு யோசேப்பின் மீது குற்றம் சுமத்தி, அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பினார். அங்கேயும் கர்த்தர் சிறைச்சாலைத் தலைவனிடம் யோசேப்புக்கு தயைக் கிடைக்கும்படிச் செய்தார். நாமும் கர்த்தருக்கு பயந்து உத்தமமாய் நடந்தால் மிகப்பெரும் அற்புதங்களை நம் வாழ்விலும் கர்த்தர் செய்வார்.

### எகிப்தின் அதிபதி:

யோசேப்பு சொப்பனத்திற்கான பொருள் கூறும் குணம்,கர்த்தர் யோசிப்போடு இருந்தது இதன் பலனாக எகிப்தின் ராஜாவான பார்வோனின் சொப்பனத்திற்கான பொருள் கூறினார். அதனைத் தொடர்ந்து யோசேப்பை, எகிப்தின் ராஜாவான பார்வோன் யோசேப்பை தனக்கு அடுத்த நிலையிலே உயர்த்தினார். அடிமையாகச் சென்ற யோசேப்பு அதிகாரியாக கர்த்தரால் உயர்த்தப்பட்டார்.

ஆம் பிரியமானவர்களே, நாமும் இந்த உலகத்திலே வாழும் போது பல பாவத்தின் வலைகளிலே விழுவதற்கு வாய்ப்புகள் அதிகம். ஆனால், கர்த்தர் நமக்காக ஓர் திட்டத்தை வைத்திருக்கிறார். அவருக்கு பயந்து பாவத்தை விட்டு பரிசுத்தமாக வாழ்ந்தால், நம்மையும் கர்த்தர் யோசேப்பைப் போல பெரிய நிலைகளிலே, நம் தலையையும் உயர்த்துவார். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

Article by

**MRS. MELBIN JONESLY**

Youth Fellowship

# PRIMARY A





ZIA MIREN

JACQUELINE





CHRISTO







**JEMIMAH**





**FELICIA**





**EFRAIN**



**TEACHER – MRS. VELANGANI BAKTHA THIYAGARAJAN**

# JOB 1-12
# யோபு 1-12

1. எவைகள் சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்?
2. பூமியின் தூளில் முளைத்ததை மூடுவது எது?
3. யாருடைய கூடாரங்களை அக்கினி பட்சிக்கும்?
4. யோபுவின் முகம் அழுக்கடைந்தது எதினால்?
5. மேன்மேலும் பலத்துப் போவான் யார்?
6. யாருடைய அடுப்பின் நெருப்பு அவிந்து போம்?
7. கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பவர் யார்?
8. அவன் பிச்சை உருவிப் போவது எது?
9. கோபக்கினையின் நாளுக்கென்று கொண்டு வரப்படுகிறவன் யார்?
10. சொக்க வெள்ளியமாய் இருப்பவர் யார்?
11. எதை விட்டு நான் பின் வாங்குவதில்லை என்று யோபு கூறுகிறார்?
12. எதைப் போல அதிகாலமே வேலைக்கு புறப்படுகிறார்கள்?
13. எவைகள் தேவன் பார்வைக்கு சுத்தமானவைகள் அல்ல?
14. கர்த்தர் தமது ஆவியினால் எதை அலங்கரித்தார்?
15. பணம் எதற்கு ஒப்பிடப்படுகிறது?

## ஜனவரி-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. யோபு 1:17
2. யோபு 2:10
3. யோபு 3:24
4. யோபு 4:17
5. யோபு 5:23
6. யோபு 6:15
7. யோபு 7:7
8. யோபு 8:11
9. யோபு 9:26
10. யோபு 10:12
11. யோபு 11:12
12. யோபு 12:15.

## மார்ச்-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்
திருமதி. பிப்ளின் நெல்சன்
திருமதி. ரோஸ்மேரி
செல்வி. அஜின்ஷா
திருமதி. ராதிகா செல்வக்குமார்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.





Name:

Date:


Kids Coloring





# Easter Word Hunt





- Tomb
- Forgiveness
- Crucifixion
- Cross
- Resurrection
- Mercy
- Lamb
- Palm
- Sunday
- Christ

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | P | L | I | W | A | K | W | U | G | B | E | Y | H | F | W | A | M | Y |
| S | Q | N | P | A | L | M | J | H | J | X | N | T | I | O | F | P | L | W |
| U | G | Y | Q | P | Y | C | R | U | C | I | F | I | X | I | O | N | B | Z |
| N | E | N | M | V | F | O | R | G | I | V | E | N | E | S | S | P | C | P |
| D | W | M | S | O | O | J | R | Z | K | N | R | M | E | O | W | C | O | Z |
| A | Q | A | S | H | T | C | E | V | A | L | A | X | B | U | L | B | C | E |
| Y | W | B | F | X | E | C | S | T | V | C | H | Z | I | S | V | T | F | O |
| O | O | L | S | G | A | H | U | O | S | L | N | B | L | H | N | I | O | X |
| X | L | J | A | L | I | R | R | M | Y | N | Y | C | G | X | T | Z | A | O |
| A | Z | J | X | A | L | I | R | B | P | C | H | Z | V | T | V | F | S | I |
| K | K | F | V | M | P | S | E | C | R | C | R | O | S | S | K | Y | G | Q |
| W | F | W | W | B | E | T | C | R | I | J | X | M | E | R | C | Y | L | N |
| U | U | M | H | B | G | U | T | L | W | A | Y | X | G | G | L | E | D | Q |
| Z | Y | X | N | Z | L | A | I | Q | Y | B | P | Z | I | A | L | O | C | B |
| P | M | V | T | A | K | E | O | B | B | A | B | X | B | Q | X | A | A | C |
| R | A | O | O | L | H | S | N | V | Y | S | A | L | B | O | Y | G | E | X |






Name : ..............................................................................

WORD SEARCH

Name : ..............................................................


# HE IS RISEN

Guide the women to the tomb.



# CROSS WORD

Name : ..........................................................................




**ACROSS**

1 Jesus

5 Doubting __

6 Jesus rode a __ into Jerusalem

7 Disciple who denied knowing Jesus

10 Easter season

11 Colored Easter

13 __ of Gethsemane

16 Easter celebrates the __ of Jesus

17 Sunday before Easter

14 __ betrayed Jesus

15 Easter animal?

**DOWN**

2 After 40 days, Jesus ascended to __

3 An angel rolled away the __ covering the tomb

4 People greeted Jesus with ___ branches

6 where Jesus died

8 Mary __ discovered Jesus had risen

9 __ sentenced Jesus to die

12 Season before Easter

# APRIL - 2026

| | |
|---|---|
| 01-APRIL | Mrs. Olivia Sherin |
| 02-APRIL | Miss. Aaliya B. Babina |
| 02-APRIL | Mr. Blessin Paul |
| 03-APRIL | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-APRIL | Master. Alan Manis |
| 04-APRIL | Master. Regan Shan |
| 06-APRIL | Mr. Herchil Harish |
| 08-APRIL | Baby. Shalyn Zaara |
| 09-APRIL | Mr. A. Yobu |
| 09-APRIL | Mr. A. Vijay |
| 10-APRIL | Mr. S. Ghilton Raj |
| 10-APRIL | Mrs. Nisha |
| 11-APRIL | Mr. A. Stalin Jose |
| 11-APRIL | Mrs. K. Santhiya |
| 13-APRIL | Mrs. Rose Mary |
| 16-APRIL | Mrs. Vimala Nicson |
| 17-APRIL | Ms. Diniya Sunshine |
| 17-APRIL | Mrs. Sebatini Samuel Jerin |
| 18-APRIL | Mrs. Ramya Joel |
| 18-APRIL | Ms. Janice Valencia Vijay |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

| | |
|---|---|
| 20-APRIL | Master. Jervin Rajo |
| 21-APRIL | Mr. Babu Abraham |
| 22-APRIL | Mrs. Sathiya Mary |
| 22-APRIL | Mr. S. Johnson |
| 23-APRIL | Mr. Dhana Sekar |
| 24-APRIL | Mrs. D. Mercylin Latha |
| 24-APRIL | Mr. S. Selva Ezhil |
| 27-APRIL | Master. Solomon Livingston |
| 28-APRIL | Mr. M. Santhosh Kumar |
| 29-APRIL | Mr. Daniel Durai Singh |
| 30-APRIL | Ms. Sherin Shah |
| 30-APRIL | Mr. G. Thangam |

*" With long life I will satisfy him and show him my salvation*

*-Psalm 91:16*

*"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."*
















# APRIL *Wedding* ANNIVERSARY

**05-APR** Mr. Kingsly Stoobert & Mrs. Salini Vimala Kingsly

**10-APR** Mr. Bhaskar Rajaram & Mrs. Angelin Nalini

**13-APR** Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel

**16-APR** Mr. Glymond Fenzer & Mrs. Sweetlin Abi

**19-APR** Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin Christabel

**26-APR** Mr. Melbin Paul & Mrs. Shaly Jesie

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14










PRIMARY A



PRIMARY A





VOLUNTEER






JUNIOR B

JUNIOR A








TEENS B



SENIOR

SENIOR


"He is not here; He has risen, just as He said. Come and see the place where he lay."

Matthew 28:6




EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE

TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com

Web: csitamilparishalain.org


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY